பரந்தூர் விமான நிலையத்திற்கு மாற்றாக வேறு இடம் குறித்து

# ஒன்றிய அரசிடம் த.வெ.க. அரசு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை!

## மாநிலங்களவையில் - பி.வில்சன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 22-

“பரந்தூர் விமான நிலையத்திற்கு மாற்றாக வேறு இடம் குறித்து ஒன்றிய அரசிடம் த.வெ.க. அரசு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை! என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.



பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் எழுப்பிய கேள்விக்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோஹோல் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

சென்னை, பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள பசுமை வழி விமான நிலையத்தின் தற்போதைய நிலை, கட்டம் வாரியான முன்னேற்றம், மொத்த மதிப்பிடப்பட்ட திட்டச் செலவு, இது வரை ஒதுக்கப்பட்ட வரவுசெலவு நிதி மற்றும் அதை முடிப்பதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு ஆகிய விவரங்கள்; தருக.

**பதில் :** பரந்தூரில் சர்வதேச பசுமை வழி விமான நிலையத்தை அமைப்பதற்காக, தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (TIDC) சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் (MoCA) 07.04.2025 அன்று ‘கொள்கை அளயவிலான’ (InPrinciple) ஒப்புதலை வழங்கியுள்ளது. செப்டம்பர் 2024இல் TIDCO சமர்ப்பித்த கொள்கை அளவிலான விண்ணப்பத்தின் படி, கட்டம்1 (Phase1)க் கான மதிப்பிடப்பட்ட திட்டச் செலவு தோராயமாக ரூ. 10,500 கோடி ஆகும்.

பசுமை வழி விமான நிலையக் கொள்கை, 2008 இன் படி, நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு (R&R), நிதி திரட்டுதல், சுற்றுச்சூழல் அனுமதிகளைப் பெறுதல் உள்ளிட்ட பசுமைப் புல விமான நிலையத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட விமான நிலைய உருவாக்குநர் அல்லது மாநில அரசைச் சேர்ந்ததாகும். விமான நிலையத் திட்டங்களை முடிப்பதற்கான காலக்கெடு நிலம் கையகப்படுத்துதல், கட்டாய அனுமதிகள் கிடைப்பது, நிதி நிருவாக முடிவு போன்ற பல காரணிகளைப் பொறுத்தது.

பசுமைப் வழி விமான நிலையத்திற்காக முன்மொழியப்பட்ட இடத்தை மாற்றுமாறு புதிய தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதா, ஆம் எனில், அத்தகைய கோரிக்கையின் தேதி வாரியான விவரங்கள் மற்றும் அதற்கு அரசின் பதில் என்ன.?

**பதில் :** இல்லை.

சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பணிகளின் தற்போதைய நிலை, திட்டம் வாரியான பட்ஜெட் ஒதுக்கீடு, புவியியல் மற்றும் நிதி முன்னேற்றம், எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதி மற்றும் பிற தொடர்புடைய விவரங்களைக் குறிப்பிடவும்?

தற்போதைய விமான நிலையங்களை மேம்படுத்துவது/ நவீனப்படுத்துவது என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முக்கிய விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பணிகள் வருமாறு:

**சென்னை:** ரூ. 2,467 கோடி செலவில் இரண்டாம் கட்ட (PhaseII) நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இதன் புவியியல் மற்றும் நிதி முன்னேற்றம் முறையே தோராயமாக 81% மற்றும் 71% ஆக உள்ளது. மேலும், மழைநீர் வடிகால் சீரமைப்பு (ரூ. 209.01 கோடி), முனையம் 1ஐப் புதுப்பித் தல் (ரூ. 81.8 கோடி) மற்றும் ஏர்சைட் (Airside) உட்கட்டமைப்பு மேம்பாடு (ரூ. 480.06 கோடி) போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருச்சிராப்பள்ளி:** ரூ. 80.17 கோடி செலவில் புதிய ATC கோபுரம் மற்றும் தொழில்நுட்பக் கூடப் (Towercum Technical block) பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் புவியியல் மற்றும் நிதி முன்னேற்றம் முறையே தோராயமாக 76% மற்றும் 49% ஆக உள்ளது.

**கோயம்புத்தூர்:** புதிதாகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் ரூ. 51.31 கோடி செலவில் சுற்றடைப்புச் சுவர் (Boundary Wall) கட்டுதல் மற்றும் ரூ. 13.71 கோடி செலவில் தற்போதுள்ள முனையக் கட்டிடத்தை (Terminal Building) விரி வாக்கம் செய்தல் மற்றும் மாற்றியமைத்தல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

என பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பரந்தூருக்கு மாற்றாக வேறு இடம் தேர்வு செய்யப்படும் என கூறி, பரந்தூர் விமான நிலைய பணிகள் தவெக அரசால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது மாற்று இடம் பற்றி ஒன்றிய அரசிடம் எந்த கோரிக்கையுமே இதுவரை தவெக அரசு வைக்கவில்லை என்ற தகவல் வெளிவந்துள்ளது.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




தமிழ்நாட்டில்

# மதச் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 22 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-



நாடு முழுவதும் (குறிப்பாகத் தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதி உட்பட) மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக (PRASAD Pilgrimage Rejuvenation and Spiritual Augmentation Drive) திட்டத் தின் கீழ் அனுமதிக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப் பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் என்ன ? (தமிழ்நாட்டில் மாநிலம்/யூனியன் பிரதேசம் மற்றும் மாவட்டம் வாரியாக).

புனிதத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை, உள்ளூர் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றில் ‘பிரசாத்’ திட்டங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா?

தமிழ்நாட்டிலிருந்து (கோயில் நகரங்கள் மற்றும் பாரம்பரியப் புனிதத் தலங்கள் உட்பட) இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அல்லது நிதிக்காகக் காத்திருக்கும் முன்மொழிவுகளின் தற்போதைய நிலை மற்றும் அதற்கான தாமதத்திற்கான காரணங்கள் என்ன ?

தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் சமச்சீரான மதச் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், குறைவாக அறியப்பட்ட கூடுதல் புனிதத் தலங்களையும் உள்ளடக்கும் வகையில் ‘பிரசாத்’ திட்டத்தை விரிவுபடுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

சிங்கம்புணரி அருகே 100 ஏக்கரில்

# புதிதாக குவாரி: கிராம மக்கள் - சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு!

சிவகங்கை, ஜூலை 22-

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா ஜெயங்கொண்ட நிலையில் 100 ஏக்கரில் புதிதாக கல்குவாரி அமைக்க அனுமதி பெற்று தனியார் சிலர் சித்தமல்லி கண்மாய் ,நைனா குளம் கண்மாய், காட்டூரனி கண்மாய் ஆகிய பகுதிகளில் சுற்றி வேலி அமைத்து அங்குள்ள அரிய வகை மரங்கள் வேம்பு, பனை போன்ற மரங்களை அழித்து வருகிறார்கள். வெட்டி வருகிறார்கள்.

இந்த கண்மாய் பகுதிகளில் அதிகமான அளவில் முயல், உடும்பு, மான்கள், அதிசய பறவைகள், தேவாங்கு இனம் ஆகியவை வாழ்ந்து வருகிறது. இந்த மரங்கள் வெட்டப்படுவதால் அவைகள் வெளியேறி பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு செல்கிறது. இதில் தேவாங்கு ரோட்டை கடந்து செல்லும் பொழுது நாய்களால் கடிபட்டும்,, சக்கர வாகனங்களால் அடிபட்டும் பத்துக்கு மேற்பட்ட தேவாங்குகள் இறந்துவிட்டது. இதனால் அப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று கூறி ஜெயங்கொண்டம் நிலை மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் குவாரி அமைக்கும் திட்டத்தை கைவிட வலியுறுத்தி வருகின்றனர். இங்கு குவாரி அமைந்தால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும். நிலத்தடி நீர் குறையும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும்.என்று கிராம மக்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்தும் இதுவரை அங்கு குவாரிஅமைக்கும் பணி நிறுத்தப்படவில்லை.

இது குறித்து தாய்மண் சுற்றுச்சூழல் இயக்க ஆர்வலர் சட்ட ஆலோசகர் வேலாயுதம் மற்றும் பொது மக்கள் இம் மாவட்ட அமைச்சரும் கனிம வளத்துறை அமைச்சர்பிரபுவிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அமைச்சரின் அனுமதியுடன் இந்த குவாரி அமைக்கப்படுகிறதா என்று பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் குவாரி அமைக்கும் பணியை கைவிட வேண்டும் என்று அரசிற்கு தொடர் கோரிக்கை வைத்துள்ளார்கள். அவ்வாறுகுவாரியை மூட அரசு மறுத்தால் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதனால் ஜெயங்கொண்டநிலை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பதட்டம் நிலவுகிறது.


